# கிறிஸ்துவின் திருவுடல், திருஇரத்தம் பெருவிழா

# இரண்டாவது திருவழிபாடு ஆண்டு

# 2024-06-02

*(இன்றைய வாசகங்கள்:*

*விடுதலைப் பயண நூலிலிருந்து வாசகம்* 24: 3-8,

*திருப்பாடல்* 116: 12-13. 15-16. 17-18,

*எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்திலிருந்து வாசகம்* 9: 11-15 ,

*மாற்கு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்* 14: 12-16, 22-26 )

## திருப்பலி முன்னுரை

*ஆண்டவர் எனக்குச் செய்த எல்லா நன்மைகளுக்காகவும் நான் அவருக்கு என்ன கைம்மாறு செய்வேன்?*

*அன்புமிக்க சகோதர சகோதரிகளே! கனிவான செயல்களாலும், தமது பேரன்பாலும் நம்மைக் காத்துவரும் நம் இறைவனின் திருப்பெயரால் நல்வாழ்த்துக்கள் கூறி இத் திருப்பலிக் கொண்டாட்டத்திற்கு உங்களை அன்போடு வரவேற்கின்றோம். இன்று நாம் கிறிஸ்துவின் திருவுடல், திரு இரத்தப் பெருவிழாவைக் கொண்டாடுகின்றோம்.*

*மனிதரும், விலங்குகளும் உயிர்வாழ வேண்டுமானால், உடல் இயங்க வேண்டும். அதற்கு இரத்தம் தேவை. இந்த இரத்தத்தை உற்பத்தியாக்க உணவு தேவை. அத்தோடு மனிதரின் சமூக வாழ்விற்கு உறவுகள் தேவை. எனவே நம்முடைய ஆன்மீக, சமூக வாழ்வு சீராக அமைய இயேசு தன்னுடைய உடலையும், இரத்தத்தையும் நமக்கு இலவசமாகவே கொடுத்துள்ளார். நாம் வாழ்வு பெறும் பொருட்டு, அதுவும் அதனை நிறைவாகப் பெறும் பொருட்டு தன் உடல், இரத்தம் அகியவற்றை வழங்கியுள்ளார். இயேசுவின் இந்தத் தியாக வாழ்வு வெறுமனே உடலையும், இரத்தத்தையும் கொடுத்தலோடு முடிந்துவிடவில்லை. மாறாகத் தமது அன்பை, இரக்கத்தை, மன்னிப்பை, ஆசீர்வாதத்தை தொடர்ந்து நமக்குக் கொடுத்துக் கொண்டிருக்கும் ஒரு தொடர் செயற்பாடாக இருந்து கொண்டேயிருக்கின்றது. அதனுடைய பிரதிபலிப்பே நாளாந்தம் நாம்*

திருப்பலியில் உட்கொள்ளுகின்ற இயேசுவின் திருவுடலாக மாற்றம் பெறும் நற்கருணையாகும். எனவே நாம் இந்த நற்கருணையைத் தகுதியுடன் உட்கொண்டு, கிறீஸ்துவின் திருவுடலாகிய நற்கருணை குறித்துக்காட்டும் அன்பு, ஒற்றுமை, அன்பிய சமூக வாழ்வு ஆகியவற்றை நாம் அர்த்தமுள்ள விதத்திலே வாழ வரம் கேட்டுத் தொடரும் பலியில் பங்கேற்போம்.

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

*வாழ்வதரும் உணவு நானே என்ற இறைவா!*

*தினமும் உமக்குத் திருப்பலிகளை நிறைவேற்றும் திருஅவைப் பணியாளர்களை ஆசீர்வதியும். பலிகளாலும், வாழ்வாலும் உம்மை மகிமைப்படுத்திட தேவையான வரங்களைக் கொடுத்தருள வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*உணவாக தன்னையே தந்த இறைவா!*

*உலகில் ஒருவேளை உணவு கூட கிடைக்காமல் அவதிப்படும் மக்கள் மேல் மனமிரங்கி, அவர்களுக்குத் தினமும் உண்ன உணவு கொடுத்து அசீர்வதிக்க வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*இதை என் நினைவாகப் பருகுங்கள் என தன் இரத்தத்தையே கையளித்த இறைவா!*

*உம் திரு இரத்தத்தால் எங்கள் பாவங்களைக் கழுவி, உடலுள்ள நோய்களைக் குணமாக்கி நலமான வாழ்வைப் பெற்று மகிழ் வரம்தர வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*இதை எவராவது உண்டால், அவர் என்றுமே வாழ்வார் என்று மொழிந்த இறைவா!*

*உமது திருஉடலையும், திருஇரத்தத்தையும் அன்றாடம் கவைக்க ஆர்வத்தோடு தவறாமல் தினமும் திருப்பலியில் பங்கேற்கும் வரம்தர வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*வாழ்வின் ஊற்றே இறைவா!*

*பல்வேறு பிரச்சினைகளால் அல்லப்படும் எம் நாட்டிற்காகவும், நாட்டு மக்களுக்காகவும் வேண்டுகின்றோம். எம் நாட்டு மக்கள் எல்லா வளமும் பெற்று வாழ் வேண்டிய வரமருள வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*ஆண்டவராகிய இயேசுவே, உம்மைப் போற்றுகிறோம்.*

*உமது திருவுடல், திருஇரத்தம் என்னும் கொடைகளுக்காக நன்றி கூறுகிறோம். எங்களை ஆசிர்வதித்தருள வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*கருணையின் இறைவா!*

*கிறிஸ்துவத்திற்கு எதிராய் உலகெங்கும் செயல்படும், மக்களைக் கண்ணோக்கும். அவர்கள் மனமாறி தங்கள் வன்முறையிலிருந்து விடுபட்டு மனிதநேயமுடன் வாழ வேண்டிய நல்மனதினைத் தந்தருள வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*ஆயனின் கட்டளையை கடைபிடிப்போரிடம் அன்பு நிறைவடைகிறது என உணர்த்தும் ஆயனே!*

*கடுமையான வார்த்தைகளைப் பேசியதால் மனம் புண்ணாகி அவமானமாக இருக்கிறது. பல்வேறு தொல்லைகள் என்னைப் புண்ணாக்கி வேதனையால் நொந்து போகச் செய்துவிட்டது என மனம் வருந்தும் உள்ளத்தினரை அன்பு நிறைந்த வார்த்தையால் அரவணைக்கவும், உமது திருக்காயங்களுக்குள் பாதுகாப்பாக அவர்கள் வாழவும் அருள் பொழிய, இறைவா உம்மை மன்றாடுகிறோம்.*